உ

ஸ்ரீ வாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறநில்.

வெண்டாமரை ௪. | 1916-ம் ஆண்டு ஜூலை மீ | இதழ் ௭.

இலௌகிகப் பகுதி.

நமது கலைமகள்.

நமது கலைமகளைப்பற்றிப் பலர் பலவிதமாகப் பகர்கின்ற சொற்கள் நம் செவிக்கு எட்டுகின்றன. கலைமகளிடத்துக் காணப்படும் விடயங்கள் கடினமாயிருக்கின்றன என்று கழறுகின்றனர் சிலர். யாவர்க்கும் விளங்குமாறு எளிய நடையில் எழுதவேண்டுமென்று இயம்புகின்றனர் சிலர். சிலர் கலைமகளென்னும் பெயர்க்கேற்ப வியாசங்கள் உயர்ந்த நடையில் அமைதல்வேண்டுமென்று அறையாநின்றனர். இலக்கிய விருப்பமுள்ள சிலர், பழைய இலக்கியங்கள் நிரம்ப வேண்டுமென்று நிகழ்த்துகின்றனர். இலக்கணப் பற்றுடையோர் இலக்கணப் பொருட்கள் எழில்பெறவேண்டுமென்கின்றனர். சிலர் இலக்கிய விலக்கணங்களாற் பயனென்னை, உயிர்க்குறுதி பயக்கும் ஞானப்பொருள்கள் நன்குறவேண்டுமென்று நவிலுகின்றனர். மற்றும் சிலர், இலக்கிய விலக்கணங்களும் ஞானப்பொருட்களும் இங்கு யாருக்குவேண்டும், உலக அறிவை ஓங்கச்செய்யும் விடயங்களே மலியவேண்டுமென்று

வழுத்துகின்றனர். கற்றவர்க்கன்றி மற்றவர்க்குக் கலைமகள் பயன்படுதலில்லையென்று விளம்புகின்றனர் வேறு சிலர்.

பல்வேறுவகைப்பட்ட கருத்துக்களையுடைய இவர்கட்கு இப்போது நாம் தக்கபடி சமாதானம் கூறவேண்டியிருக்கிறது. விடயங்கள் கடினமாகத் தோற்றுவதற்கு விடய வுணர்ச்சியின்மையே காரணமாகும். அது விடயத்தின் குற்றமன்று. விடய வுணர்ச்சி யில்லாதவர்களுக்கு எவ்வளவு எளிய நடையில் எழுதினாலும் என்ன பயன் தரும்? கலைமகளில் எளிய நடையிலமைந்த வியாசங்களே யில்லையா? எத்தனையோ இருக்கின்றன. உலகத்தில் இலக்கிய விலக்கணம் பயிலும் சிலர்க்காக அப் பகுதிகள் விரியுமாயின், அவற்றிற் பயிற்சியில்லாத பலர்க்கு அவை அவ்வளவு பயன் தருமா? சாத்திரப் பகுதியே தழைப்பதற்கு மக்களெல்லோரும் சாத்திரப் பயிற்சியுற்றவர்களாகவன்றோ இருத்தல் வேண்டும்? அங்ஙனமிருப்பதாகக் காணப்படவில்லையே. இலக்கிய விலக்கணம் சிலர்க்கு வேண்டாவென்று சொல்லலாம், எல்லோர்க்கும் வேண்டுவதில்லையென்று எப்படிச் சொல்லமுடியும்? உலக விடயங்களை நிரம்பியிருக்கவேண்டுமெனின், உறுதிப்பொருளை யுடைய விரும்புவார்க்கு அவை பயனளிப்பதெங்ஙன்? அவர்கட்குச் சாத்திரப் பகுதி யிருக்கவேண்டுவது ஆவசிகமன்றோ? கல்லாதவர்கட்குக் கலைமகள்மட்டுமோ பயன் தருதலில்லை? அவர்கட்குப் பத்திரிகை யனைத்தும் பயன்தராதனவே.

மேலும், கருத்து வேறுபாட்டையுடைய பலரையும் நாம் எப்படி உவப்புறுவிக்கமுடியும்? உலகம் பல்வகைச் சுவையினை யுடையது. சிலர்க்கு விருப்பாயிருப்பது வேறு சிலர்க்கு வெறுப்பாயிருக்கும். சிலர்க்கு வெறுப்புத் தருவது மற்றும் சிலர்க்கு விருப்பைத் தருவதாயிருக்கும். எல்லோர்க்கும் நல்ல பொருள் உலகில் எங்குமேயில்லை. எவராலும் விரும்பப்படுகின்ற நிலவும் சிலரால் வெறுக்கப்படுகின்றதன்றோ?

ஆயினும் நம் கலைமகள் பலவகையாலும் கூடியவரையில் பலர்க்கும் பயன்படுமாறு அமைக்கப்பெற்றுள்ளதென்பது உற்று நோக்குவார்க்குத் தெற்றென விளங்கும். எங்ஙனமெனின், உல

கப்பற்றை யொழித்து உறுதிப்பொருளையடைய விரும்புவார்க்கு உண்மை நூல்களின் உதவி வேண்டுதலின், அவை கலைமகளின் சாத்திரப் பகுதியில் சாற்றப்படுவன. உண்மைநூ லுணர்தற்குக் கருவியாயுள்ளது இலக்கிய விலக்கணமாதலின் அவை விரும்பு வார்க்கு, இலக்கிய விலக்கணப் பகுதிகள் இன்பம் செய்வன. உலக அறிவு பெறுவார்க்கு இலௌகிகப் பகுதியில் பல பொருள்கள் பாவிக் கிடக்கின்றன. இப்படிப் பலர்க்கும் பயன்படுதலைக் கருதியே இலௌகிகம், இலக்கியம், இலக்கணம், சாத்திரம் என்னும் நான்கு பகுதிகளைப் பெற்று நிலவுகின்றனள் கலைமகளென்க. இலக்கியம், இலக்கணம், சாத்திரம் இவற்றின் அறிவு பெறுபவர் உலகிற் சிறுபான்மையராக உலக அறிவு பெறுபவர் பெரும்பான்மையராதல்பற்றியே, பத்திரிகையின் அளவுக் கேற்ப, மற்றைப் பகுதிகள் சிறியனவாகவும், இலௌகிகப் பகுதி பெரிதாகவும் அமைக்கப்படுகின்றன.

அன்றியும், பத்திரிகை பலசரக்குக் கடைபோன்றது. பலசரக்குக்கடையில் பலவகைப் பொருள்களிருக்கும். ஒருவர்க்கு ஒரு பொருள் வேண்டியதிருக்கும். மற்றொருவருக்கு வேறொரு பொருள் வேண்டியதிருக்கும். இப்படியே அவரவர்களும் தங்கள் தங்களுக்கு வேண்டிய பொருளைப் பெற்றுக்கொள்வார்கள். அதுபோலவே பத்திரிகையிலும் பல்வகைப்பொருள்கள் காணப்படும். அவற்றுள் ஒவ்வொருபொருளும் ஒவ்வொருவர்க்கு வேண்டியதாகவே யிருக்கும். எவரெவர்க்கு எதிலெதில் விருப்பமோ அவரவர் அதை யதை யெடுத்துக்கொள்ளல்வேண்டும். ஒருவர்க்கும் வேண்டாதபொருள் ஒன்று மிராது. எப்பத்திரிகையும் இப்படித்தானிருக்கும். ஆகவே ஒரு பத்திரிகையிலுள்ள விடயங்கள் முழுவதும் ஒருவர்க்குப் பயன்படவில்லையென்று நினைப்பது தவறாகும்.

அல்லாமலும், நமது கலைமகளைப்பற்றித் தம் கருத்தை வெளியிடுபவர்கள், இப்பத்திரிகை என்ன நோக்கத்தைக்கொண்டெழுந்தது என்பதையும் முதலில் கவனிக்கவேண்டும். வேடிக்கையான செய்திகளைச் சொல்லி, பிறரைக் களிப்பித்தற்காக யாம்

பத்திரிகை நடத்த வந்தோமில்லை. தமிழ் வளர்ச்சி பெறவேண்டுமென்பதும், தமிழ்மக்கள் தமிழறிவுபெற்றுத் தழைக்கவேண்டுமென்பதும், தமிழ்நாடுமுழுதும் தமிழ்மணம் கமழவேண்டுமென்பதும், இப்போது நிலை குலைந்து நிற்கும் தமிழ்நங்கை முன்போல் தலையெடுக்கவேண்டுமென்பதுமே கலைமகளின் முக்கிய கருத்தாகும்.

செந்தமிழ்ச் செல்வர்காள்! பண்டைக்காலத்தில் நம் தண்டமிழ்க்கிருந்த பெருமையையும் இப்போது அதற்கேற்பட்டுள்ள சிறுமையையும் நீங்கள் அறிவீர்களே! அமிழ்தினு மினிய தமிழ் மொழி இப்போழ்து சிலரால் அழகு குலைந்து உரு மாறி வருவதைச் சற்றுக் கண்விழித்து நோக்குங்கள். இதுவரையும் இருந்ததுபோல் இன்னமும் அசட்டைசெய்யப்படுமானால் தேனினுமினிய தென்மொழி இன்னும் சின்னாளில் என்ன நிலைமையை அடையுமென்பதை நீங்களே நினைத்துப்பாருங்கள் கன்னித் தண்டமிழ் தனது முன்னைய நிலைமையை அடையவேண்டுமானால், அதன் இயற்கையழகு குலையாதிருக்கவேண்டுமானால், அதேகருத்துக்கொண்டெழுந்த நமது கலைமகளை ஆதரியுங்கள், ஆதரியுங்கள். கலைமகளை மட்டுமன்று, கலைமகள்போன்று தமிழ்வளர்ச்சி கருதியெழுந்த மற்றைத் தமிழ்ப் பத்திரிகைகளையும் ஆதரிக்கவேண்டுவது உங்கள் கடமையாகும். இதற்காக நீங்கள் பெருந்தொகை செலவுசெய்யவேண்டியதில்லை. ஆண்டொன்றுக்குப் பன்னிரண்டு பத்திரிகை பெற்றுக்கொண்டு அதற்காக ஒரு ரூபாய் கொடுங்கள். மற்றவர்களையும் கொடுக்கச்செய்யுங்கள். இது எவர்க்கும் இயலாத காரியமல்லவே. பயனற்ற செயல்களில் எவ்வளவோ பொருட்கள் செலவுசெய்யப்படுகின்றனவே. சிறிதும் கல்லாதவர்களும் பெரிதும் கற்றவர்களும், பத்திரிகையால் தங்கட்குப் பயனில்லையென்று தோற்றினும், தாய்மொழியின் வளர்ச்சிக்காகத் தமிழ்ப் பத்திரிகைகளை யாதரிக்கக் கடமைப்பட்டவர்களே. மேல்நாட்டுப் பெரும்போர் காரணமாக, காகித முதலியன ஒன்றுக்கு மூன்றாக விலையேறி வருத்தத்தை யுண்டுபண்ணும் இக்காலத்தில் ஆதரிப்பும் குறையுமாயின், பத்திரிகை தளர்ச்சியுறு

மென்பதை யாம் சொல்லவேண்டியதில்லையே. தமிழ்ப் பத்திரிகையை ஆதரிக்கும் விடயத்தில் தமிழ் மக்கள் இக் காலத்தும் அசட்டை செய்வார்களானால் அவர்கள் தாய்க்குச் செலுத்தும் கடமையினின்றும் தவறினவராவார்கள்.

பத்திராதிபன்.

கலைமகள் வாழ்த்து.

நமது கலைமகள் உலகத்தில் நீண்டநாள் நிலவி, முத்தமிழும் பல் தொழிற்செய்திகளும் தன தங்கத்தில் பொருந்தி வாழக் கடவதாகக் கடவுளைப் பிரார்த்திக்கின்றனம்.

இசைப்பா – பண் – சாளரப்பாணி, தாளம் – ஒன்றன் பாணி.

சீரார் புகழ்படைத்த திகழ்புதுவை யதனுள்
பேரார் கலைமகளைப் பெறுவீர்க ளுலகீர்
பேரார் கலைமகளைப் பெறுவீர்க ளாமாயின்
நேரா ரிருமைக்கு நிகழ்நலமே யடைவீர்.

இயலோடு விசையு மியனடமு மற்றச்
செயலோடு திகழ்கின்ற கலைமகளைப் பாரீர்
செயலோடு திகழ்கின்ற கலைமகளைப் பார்ப்பின்
முயல்வோடு வான்வினையு முன்னுறும தறிவே.

கற்றோர்கள் மெச்சுங் கலைமகளே நீயிவ்
வுற்றோர்க ளுற்ற வுலகினிலே வாழி
உற்றோர்க ளுற்ற வுலகினிலே வாழில்
மற்றோர்க ளியாவரு மாண்படைவர் தாமே.

இவை இடைமடக்கிவந்த கந்தருவம். இப் பண்ணிற்கு ஆரியத்துள் சாலவாவதினி என்று பெயர்.

திரு. சுப்பிரமணிய தேசிகர்,
சிலாசாசன பரிசோதகர், காஞ்சீபுரம்.

சற்புத்திரன் சஞ்சலம்.

ஓர் சோகக் கதை.

அத்தியாயம் 7.

(வெண்டாமரை ௪, இதழ் ௫–௬, 105-ம் பக்கத் தொடர்ச்சி.)

தாயிழந்து தந்தை யிழந்து தனிமையாய் நின்ருள் சாவித்திரி. அவள் அன்னை இறந்த சுமார் பதினைந்து தினங்களாக நான் அவளைக் காணவில்லை. பின்னர் ஒரு நாள் அதற்காக அவள் வீட்டுக்குச் சென்றேன். அவள் தாய் எனக்குக் கூறிய மொழிகளும், என்னென்னவோ கிளர்ச்சிகளும் என் நெஞ்சை உறுத்தின. அன்றியும் தந்தை யிழந்து தாயிழந்து தனிமையாய் நின்ற சாவித்திரியின் நிலைமை எவ்வாறிருக்கிறது என்று நான் அறியவேண்டியதும் ஆவசிகமன்ரு? ஆகையால் தான் அவளைக் காண நாடிச் சென்றேன்.

அவன் — அந்த மடையன் — அவள் ம்மாமன் — அந்தப் பாதகன் — (அவன் பெயர் இரத்தினசாமி) முற்றத்தைச்சார்ந்த முன்னறையில், ஓர் விசிப்பலகைமீது மன்னுர்சாமிபோல் உட்கார்ந்திருந்தான். உள்ளே சென்று நின்றேன். அவன் என்னைப் பார்த்தான். "யார் அது?" என்று உரத்த குரலில் வெருட்டினுன். இவ் வுபசாரத்தால் நான மதிமயங்கினேன். "என்! நான்தானே!" என்று சாந்தமாகக் கூறினேன். உடனே சாவித்திரி தோன்றினுள். அருகே நின்ருள். அந்த எருமைமாடு அவளை நோக்கி ஒரு கடும் பார்வை பார்த்தது. "வெட்கம் — மானம் — மரியாதை — லஜ்ஜைகெட்ட செருக்கி! புருஷனைத் தின்றுவிட்டது மல்லாமல் வேசியுமாய்விட்டாயோ! சீ! உள்ளே ஓடு" என்று சீறி எழுந்தான். அவன் எழுந்ததைப் பார்த்தேன். அருகே நின்ற பெண்மணியைக் காணவில்லை. மின்னல்போல் வந்தாள், இடிபோல் உருட்டினுன், மின்னல்போல் மறைந்தாள்.

"வயதுப் பெண்கள் இருக்கிற இடத்தில் உனக்கென்ன போக்குவரவு! அந்த ஈன வழக்கமெல்லாம் அந்த வெட்கங்கெட்டவளோடு போயிற்று. இனி நான்தான் அதிகாரி. இனி நீ இந்த வீட்டு நடையில் கால் வைப்பாயானுல் உன் காலை முறித்துக் கடலுக்கப்பால் எறிந்துவிடுவேன். போ வெளியே! —"

இவை யார் சொன்னவை என்றுகூட நான் சொல்லவேண்டுமா! என் கண்கள் கபகபவென எரிந்தன. என் நெஞ்சு எரிந்தது. என் மூச்சு எரிந்தது. பின்னர் என் மேனி முழுதும் எரிந்தது. யாவும் ஒரு கணத்தில். அந்தக் கடாவின் மூர்க்கக் கண்களும், கபகபவென்றெரிந்த என் கண்களும் நேர்நேராகக் காய்ந்து நோக்கின. தட தடவென்று என் சித்தத்தினின்று தாண்டிவந்த மொழிகள் என் இதழ்களைப் பிளக்கப்போயின. ஆனால் அவ் விதழ்கள் அகலாது திடமெனக் கெட்டியாகப் பொருந்தி நின்றன. ஏன்? அக் கடாவின் கண்களைக் காய்ந்து நோக்கிக்கொண்டிருந்த என் கண்கள் சற்றுப் புரண்டு அறையின் உட்புறச் சுவரிலுள்ள ஒரு ஜன்னலை நாடின. ஏன் அப்படிச் சென்றனவோ! பலகணிக்கப்பால் சாவித்திரியின் முகம் தோன்றிற்று. அவள் கூந்தல் குலைந்திருந்தது. விழிகள் நிறைய வெந்நீர் அதரங்களில் அதிர்ச்சி. மோவாயும் தொண்டையும் எழுந்தெழுந்து பதியும் தேம்பல். முக முழுவதும் செக்கச் செவேல் என்ற நிறம். இத் தோற்றத்தில் அவள் முகத்தைக் கண்டேன். எங்கள் கண்கள் கலந்தன. வெம்பிக்கொண்டிருந்த என் நெஞ்சம் சுரீரென ஒரு உணர்ச்சி யுற்றது. எங்கள் கண்கள் அதற்கு முன் ஒருபோதும் அவ்வாறு நின்று கலந்ததில்லை. அந்தப் புனித மயமான பெண் தன் வலக்கை விரல்களின் உட்புறத்தைத் தன் இதழ்களில் வைத்தாள். "ஒன்றும் பேசாதேயுங்கள்" என்று அறிவித்தாள் என்றறிந்தேன். "போய்விடுங்கள்" என்று பின்பு அக் கையாலேயே சைகை செய்தாள். ஆகையால்தான் என் சித்தத்திலிருந்து கொதித்தெழுந்த மொழிகள் என் இதழ்களைப் பீறி வெளிவரவில்லை. உடனே அவ்விடத்தைவிட்டு மறைந்தேன். வீதியிலிருந்தேன். பரபரப்பாக நடந்தேன். வீட்டை யடைந்தேன். மாடிக்குப் போனேன். அறைக்குள் நுழைந்தேன். கதவைச் சார்த்தித் தாழிட்டேன். ஒரு நாற்காலியில் வீழ்ந்தேன். என் மண்டைக்குள்ளே பெரும் பிரசங்கங்களும் வாதங்களும் நிகழ்ந்தன :—

ஆசிரியனுரை :— முற்கூறிய பிரசங்கத்தையும் வாதத்தையும் பற்றிக் கதாநாயகன் வரைந்திருப்பதைப் படிக்கப் பிரியமாயிருக்கிறது. எனினும் அவற்றை ஈண்டு விடுக்கவேண்டியிருக்கின்றது. தான் சாவித்திரியொடு பழகியதையும் அவள் அன்னையின் மரண மொழிகளையும் நினைந்து நினைந்து, தான் இப்பொழுது சாவித்திரி வீட்டுக்குச் சென்றதும் அவள் மாமன் நடத்தையும் சரியல்லவென்றும் சரியென்றும் மாறி மாறி அநேகவிதமாகத் தனக்குள் வாதித்துழன்று, கடைசியாகத் தான் இனி அவ் வீட்டுக்குச் செல்வதேயில்லையென்றும் அவளை மறந்து

விட முயற்சிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கின்றான் ஜனக ராஜன். அம் முடிபின் பிரகாரம், அவன் சாவித்திரி வீட்டுக்குச் செல்வதில்லை. ஆனால் ஆண்டாளம்மாள் மாத்திரம் சிற்சில சமயம் சென்றாள். அவ்வாறு சென்றுகொண்டிருந்ததில், இரத்தினசாமி மனைவியின் மூர்க்கத்தினால் என்னவோ சில காரணங்களை முன்னிட்டு அவளுக்கும் ஆண்டாளம்மாளுக்கும் மனஸ்தாபம் விளைந்துவிட்டது. ஆகையால் சற்புத்திரன் தாயும் சாவித்திரியைக் காண்பதில்லை.

அத்தியாயம் 8.

ஆசிரியனுரை:— இன்னும் நாலைந்து சஞ்சிகைகளில் கதையை முடிக்கவேண்டும். ஆகையால் கதாநாயகன் உரையால் சாங்கோபாங்கமாகக் கூறப்பெற்றுள்ள பல விஷயங்களை நமது சிற்றுரையில் சிறுசிறு தொடர்மொழிகளாக நறுக்கிச் சுருக்கி எழுதி மிக முக்கிய சந்தர்ப்பங்களில் மாத்திரம் ஜனக ராஜன் வரைந்துள்ள அவனது சொந்த வாக்கையே தருவோமாக.

ஜனகன் தங்கை காந்திமதிக்கு விவாகம் — அவர்களுக்குச் சற்று நெருங்கிய உறவினனாகிய ஜீவரத்தினம் அப் பெண்ணை மணந்தான் — ஜீவரத்தினம் நல்ல அழகன் — அங்கங்களெல்லாம் தக்க அளவின்படி திரண்டமையப் பெற்றவன் — நல்ல ஊண் உடைகளில் விசேஷ பிரியம் வைத்துள்ளவன் — யாரிடத்திலும் தனக்காகப் பேசுந் திறமையுடையவன் — ஆனால் அவனுக்கு அதிக கல்வியில்லை — அன்றியும் காமி — சூதாட்டத்தில் தேர்ச்சியுடையவன் — விவாககாலத்தில் அவனுக்குத் தாய் தந்தையர்களில்லை — காந்திமதியை இவனுக்கு மணஞ்செய்ய அவளது பாட்டனார் நிச்சயித்தார் — அதற்கு ஜனகன் சம்மதிக்கவில்லை — நந்தகோபாலருக்கும் சற்றுச் சம்மதமில்லை — ஆனால் காந்திமதியை அவளது தந்தை அவள் தாயின் வாய்கொண்டு கேட்க, காந்திமதி சம்மதித்தாள் — ஆகையால் பெண்ணின் பெற்றோர்களும் சம்மதித்தார்கள் — பாட்டனார் தான் முன்னமே சம்மதித்திருக்கிறார் — ஆகையால் மணம் நிகழ்ந்துவிட்டது — தம்பதிகளுக்கு ஆண் குழந்தையொன்று பிறந்தது — நந்தகோபாலர் தாயின் மரணம் — தந்தையின் மரணம் — குடும்பச் சொத்துக்களையும் கடன்களையும் சார்ந்த பெருஞ் சிக்கலான வியவகாரங்கள் — குழப்பங்கள் — வர்த்தக நஷ்டங்கள் — இவைகளினால் நந்தகோபாலர் உழன்று, கடைசியில் ஒன்றும் ஒழுங்குசெய்யப் பெறாமல் அவரும் காலஞ்சென்றார் — ஜனகராஜன் தலையில் சகல பாரங்களும் வீழ்ந்தன — ஜீவரத்தினம், சுக புருஷனாக, யாதொரு தொழிலுமின்றி தனக்கு விவாகமாயினது

முதல் தன் மனைவியின் வீட்டிலேயே வசித்திருத்தல் — அவனுக்குப் பெண் குழந்தையொன்று பிறத்தல் — ஜனகன் கடுஞ் சிரமங்களுக்குட்பட்டுக் கடன்களைத் தீர்ப்பதற்காக ஆஸ்திகள் எல்லாவற்றையும் இழந்துவிட, கடைசியாக வசிக்கிற வீடும் சில பொறுமைசாலிகளுக்குச் சொற்ப கடனுமே அவனது பிதுரார்ஜிதமாக மிஞ்சின — வறுமையின் கொடிய சோதனைகள் — ஜீவாத்தினத்தால் வீட்டில் குழப்பங்கள் — காந்திமதி அவன் கையிற்பட்ட கஷ்டங்கள் — ஜனகன் வர்த்தகத்திற்கு யாதொரு முதலுமில்லாமையால் வேறு உத்தியோகத்திற்காகப் புரியும் பெரும் பிரயத்தனங்கள் பலிதம் பெறவில்லை—கடைசியாகச் சாவித்திரி வீட்டுக்கு அவன் கடைசி முறை சென்ற சுமார் இரண்டு வருஷங்களுக்குப் பிறகு நாகபுரம் என்ற நகரில் ஒரு வர்த்தகசாலையில் மாதம் எழுபத்தைந்து ரூபாய் சம்பளத்தில் அவனுக்கு உத்தியோகங் கிடைத்தது — தன் அம்மாளைப் பிரியாமற் பிரிந்து அவன் நாகபுரம் புறப்பட்டான் — மறுநாட் காலை அவன் விலாசத்திற்கு ஒரு கடிதம் — அக் கடிதத்தை ஆண்டாளம்மாள் பிரித்து வாசித்தாள் — அதை எழுதினவள் யார் — சாவித்திரி.

(தொடரும்.)

சு. அ. சுப்பராயப்பிள்ளை.

பிரகிருதி சாஸ்திரம்

மூன்றும் பாடம்.

(வெண்டாமரை ௪, இதழ் ௫-௬, 124-ம் பக்கத் தொடர்ச்சி.)

உறழ்ச்சி:— மழமழப்பாக இழைக்கப்பெற்ற ஒரு மர மேஜை. அதன் ஒருபுற ஓரத்தின் நடுவில் சுமார் முக்கால் அங்குலம் நீண்டிருந்த ஒரு கப்பி யுருளை. மேஜைமேல், அடிப்புறம் மழமழப்பாக இழைக்கப்பெற்ற ஒரு மரப் பெட்டி. அப் பெட்டியின் கைப்பிடியில் கட்டப்பெற்ற ஒரு கயிற்றின் மற்றொரு நுனி கப்பிமேல் சென்று கீழ்ப்புறமாகத் தொங்க, அந் நுனியோடு ஒரு தராசுத் தட்டு அல்லது என்னவேனும் ஒரு தட்டு கட்டப்பட்டிருக்கிறது. பெட்டிக்குள் சில வஸ்துக்கள் இருக்கின்றன. அவ் வஸ்துக்களோடு பெட்டியின் எடை 100 அவுன்ஸ். இப் பெட்டியை மேஜைமீது தள்ளவேண்டுமானால் கயிற்றின் நுனியில் தொங்குகிற தட்டின் கனத்தை அதிகரிக்கவேண்டும். அதற்காக அத் தட்டின்மேல் எடைக் கருவிகளை வைப்போம். தட்டும் அதன்மீதுள்ள

எடைக் கருவிகளும் சேர்ந்து மொத்தத்தில் சுமார் 50 அவுன்ஸ் ஆனுல் தான், 100 அவுன்ஸ் பெட்டி மேஜைமீது நகரும். பெட்டியின் மொத்த எடை 300 அவுன்ஸாக இருந்தால் அதை நகர்த்துவதற்கு, தட்டின் மொத்த எடை சுமார் 150 அவுன்ஸாகவேண்டும்.

ஆனுல், மொத்த எடை 100 அவுன்ஸ் உள்ள பெட்டியின் அடிப் பாகமும், மேஜையின்மேற் பரப்பும் சலவைக் கல்லினுல் ஆக்கப்பட்டிருந் தால் அந்த 100 அவுன்ஸ் பெட்டியை நகர்த்த, தட்டின் மொத்த எடை சுமார் 30 அவுன்ஸாக இருந்தால் போதும்.

முதலில் 100 அவுன்ஸ் மொத்த எடையுள்ள பெட்டியை நகர்த்த 50 அவுன்ஸ் சக்தி வேண்டியிருந்தது. இரண்டாவது அதே 100 அவுன்ஸ் எடையுள்ளதை நகர்த்த 30 அவுன்ஸ் போதும். இரண்டாவது முறை நகர்த்தலைவிட முதன் முறை நகர்த்தலில் அதிக சக்தி வேண்டும். ஏன்? இதற்கு நாம் என்ன பதில்தான் சொல்லலாம்! நகர்த்தும் முயற்சிக்கு, இரண்டாவது முறையில் இல்லாத ஒருவித தடங்கல் ஒருவித எதிர்ப்பு முதன் முறையில் அவசியம் இருந்திருக்கவேண்டும் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. அந்தத் தடங்கலை, அந்த எதிர்ப்பை மேற்கொள்ளத் தான் இரண்டாவது முறையைவிட முதல் முறையில் அதிக எடை வேண்டியிருந்தது. அது என்ன தடங்கல், என்ன எதிர்ப்பு என்று ஆலோ சித்தால், அது மேஜையின் மேற்பாகமும் பெட்டியின் அடிப்பாகமும் அமைந்திருக்கிற மழமழப்பைப் பொறுத்ததாயிருக்கிறது என்று தெளி வாகத் தெரிகிறது. அதிக மழமழப்பிருந்தால் தடங்கல் குறையும். மழமழப்புக் குறைந்தால் தடங்கல் அதிகரிக்கும். இந்தத் தடங்கல் ஒன்றையொன்று சார்ந்திருக்கும் வஸ்துக்களிலெல்லாம் இயற்கையாக இருக்கிறது. இதைத்தான் உறழ்ச்சி என்று நமது நூலில் அழைக்கி ருேம். திட்டமாகவும் சுருக்கமாகவும் வரையறுத்துக் கூறின், வஸ்துக் களின் புறப்பரப்பின் சொரசொரப்பான தன்மையினுல் அசைவிற்கு நிகழும் அழிசக்தியே உறழ்ச்சி என்னப்படும்.

பூரண மழமழப்பான வெளிப் பரப்புடைய வஸ்து இல்லவே யில்லை. மிகுந்த மழமழப்பான வெளிப் பரப்பிலும், கண்ணுற் காணக் கூடாதபடி ஸ்பரிசத்தால் உணரக்கூடாதபடி சொரசொரப்பு இருக்கவே இருக்கிறது. எலி பிடிக்க உதவும் பொறிக் கத்திரியின் இரண்டு பல் வரிசைகளும் பொருந்தியிருப்பனபோல, ஒன்றையொன்று சார்ந்திருக் கும் வஸ்துக்களின் சொரசொரப்புக்கள் பொருந்தியிருக்கின்றன. வஸ் துக்கள் அசையும்பொழுது அச் சொரசொரப்புக்களைத் தாண்டித்தாண்டி

அல்லது, உடைத்துடைத்துச் செல்லவேண்டியதிருக்கிறது. வஸ்து அசையும்பொழுது அவ்வாறு சொரசொரப்புக்களைத் தாண்டித் தாண்டி அல்லது உடைத்துடைத்துச் செல்லச் சக்திகள் அடுக்கடுக்காக வேண்டியதிருக்கின்றன. இவ் வடுக்கடுக்கான சக்திகள் வஸ்துவை முதன் முதல் அசையச்செய்த அளிசக்தியினின்றும் எடுக்கப்பெற எடுக்கப் பெற, அந்த முதல் அளிசக்தி குறைந்துகொண்டே வந்து கடைசியில் முற்றும் அற்றுவிடும். இதுதான் ஒரு வஸ்துவை அசையச்செய்யும் அளிசக்திக்கு உறழ்ச்சி அழிசக்தியாகி அவ் வளிசக்தியைக் குறைத்துக் குறைத்துக் கடைசியில் முற்றும் அழிக்கும் நியதி. ஆகையினால்தான் பூமியில் உருட்டப்பெற்ற ஒரு பந்து வரவர வேகங் குறைந்து கடைசியாக நின்றுவிடுகின்றது.

உறழ்ச்சி, நகருறழ்ச்சி, உருளுறழ்ச்சி என இருவகைப்படும். ஒரு மேஜையில் பெட்டி நகரும்பொழுது அல்லது தரையில் ஒரு பெட்டி நகரும்பொழுது அது நகருறழ்ச்சி. உரல் உருளும்பொழுது அல்லது வண்டிச் சக்கரம் உருண்டு செல்லும்பொழுது அது உருளுறழ்ச்சி.

கொழுப்பான பதார்த்தங்களை அவற்றை உறிந்துகொள்ளாத வஸ்துக்களில் தடவினால் அவ் வஸ்துக்களின் மீது உறழ்ச்சி குறைகிறது. எண்ணெயும் ஈரமும் மரத்தின் உறழ்ச்சியை அதிகரிக்கின்றன. மரம் அவைகளை உறிந்துகொள்ளுந் தன்மை அதற்குக் காரணம் என்னலாம். கொழுப்பும் சவர்க்காரமும் மரத்தின் உறழ்ச்சியைக் குறைக்கின்றன. எண்ணெய், பித்தளை முதலிய உலோக வஸ்துக்களின் உறழ்ச்சியைக் குறைக்கின்றது. சாதாரணமாக உருளுறழ்ச்சி நகருறழ்ச்சியைவிடக் குறைவு. ஆகையால்தான் சில நாற்காலிகள் பெரிய பெட்டகங்கள் முதலியவைகட்கு அடியில் சிறு சக்கரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் உருளுறழ்ச்சி நகருறழ்ச்சியைவிட எப்பொழுதும் குறைவன்று. குளிர்த்தேசங்களில் தரையைக் கவிந்துகொண்டிருக்கும் பனிக்கட்டியில் சக்கரங்கள் பதிந்துகொள்வதால் அச் சக்கரங்களின் அடிப்பாகத்தைத் தவிர, பக்கங்களிலும் உறழ்ச்சி உண்டாவதால் மொத்த உறழ்ச்சி அதிகமாயிருக்கும். அச் சந்தர்ப்பங்களில் சக்கரமில்லாத நகர்கின்ற வண்டிகளின் நகருறழ்ச்சியே உருளுறழ்ச்சியைவிடக் குறைவு.

(தொடரும்.)

பாரதிபக்தன்.

எறிபுழை.

பழையகாலத்தில் நமது தமிழர்கள் மிகச் சீர்திருந்தி யிருந்தனர்கள் என்பது யாவருக்குந் தெரிந்த செய்தியே. பண்டைக்காலத்துப் படைகள் பெரும்பாலும் வில், வேல், வச்சிரம், வாள், உடைவாள், பிண்டிபாலம், தண்டம், மழு முதலியனவே பலருக்குந் தெரிந்தவை. அவற்றுள் பெரும்பான்மையாய படைகளைச் சென்னையிலுள்ள பல்பொருட் காட்சிச் சாலையின்கண் இன்றும் காணலாம். இவையன்றியும் தமிழர்கள் மிகப் பழையகாலத்து எரிமருந்து (வெடிமருந்து)களைக் கொண்டு பல கருவிகளை உபயோகப்படுத்தி வந்தனர்கள் என்றும் தெரிகின்றது. நூற்றுவரைக்கொல்லி என்பது அகழி சூழ்ந்த மதில்களுக்குள்ளாக வைக்கப்பட்டு அதினின்று தோன்றும் நெருப்புகள் குண்டுகள் முதலிய வற்றால் பல பெயரைக் கொல்வதாகிய ஒரு பெரிய பொறிக்குப் பெயராம். அதனையே இக்காலத்து இருபது இருபத்திரண்டு விரல் புழையினையுடைய மிஷின் பீரங்கிக்கு ஒப்பிடலாம். நூற்றுவரைக்கொல்லி என்னுங் கருவிக்கு ஆரியத்துள் சதக்கிலி என்று பெயர். "சதம் சஹஸ்ரம் அநந்தோபவதி" என்ற வாக்கியத்தின்படி அளவற்றது என்பது அதற்குப் பொருளாகும். முசுகுந்தன் இந்திரனுடைய அமராவதி என்கிற பட்டினத்தைக் காவல் பூண்டபோழ்து அசரர்கள் ஏவிய கணையினின்று தோன்றிய புகையானது முசுகுந்த சோழனது கண்ணைப் புதைப்ப, அவற்குத் துணையாக இருந்த பூதத்தின் மந்திரத்தால் கண்தெரிந்து அசுரர்களைத் தாத்தி வெற்றிகொண்டான் என்னும் சிலப்பதிகாரக் கதையினால், அக்காலத்தும் படைகள் மூலமாய்ப் புகைப் பிரயோகம் இருந்ததென்றும் தெரிகின்றது. அம்புகளுள் பாம்பின் நஞ்சு தோய்த்தும், சில்லம்புகளில் எரிமருந்துகள் வைத்துப் பிரயோகித்தும் வந்தார்கள். அக்காலத்து வான விமானங்களும் (ஜெப்பளின் போன்றவை) வானவூர்திகளும் (ஏரோபிளேன் போன்றவை) உபயோகிக்கப்பட்டிருந்தனவென்பது பின் வருவனவற்றால் நன்கு விளங்கும். கடைச்சங்கம் தோன்றியகாலத்து அதாவது உ௲௦௦ யாண்டுகட்கு முன்னர் வானத்து விமானமூர்ந்த சோழன் ஒருவன் இருந்ததாகச் சிலப்பதிகாரம், கலிங்கத்துப்பரணி முதலிய நூல்களால் தெரியவருகின்றது. பாரதத்து உத்தியோக பருவத்தில் துரியோதனன் நகுலனிடத்து அன்னப் பறவை போன்ற ஊர்தியில் ஏறிச் சென்றதாகச் சொல்லப்படுகின்றது. சீவகசிந்தாமணியில் சச்சந்தன் மனைவி விஜயமாதேவி மயில் பொறி ஏறிச் சென்ற வரலாற்றையும் காண்க. நிற்க, இப்போழ்து ௬௦௦ ஆண்டுகளாக

அறிவு மக்களுக்கு அதிகப்படுகின்றதை நுணுகி ஆராயின், உலகத்து ஒவ்வோர் காலத்தில் மக்கள் மிகச் சீர்திருந்தியிருத்தலும், பிறகு சில காலம் அறிவு குன்றி இருத்தலும் உலக இயல்பென்றே தோற்றுகின்றது. நமது முன்னோர்களின் நூல்களை ஆராய்ந்து பார்க்குமிடத்து அவர்கள் இக்காலத்தினும் மிகச் சீர்திருந்தி யிருந்தார்களென்பது நன்முகத் தெரிகின்றது.

மேலைச் சேவூர், சிவன் கோயிலின் தென்கிழக்கு மதிலின்கண் உள்ள கல்வெட்டு.

சுவஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு கூ-வது செங்கேணி அம்மை அ(ப்பன்) பாண்டிநாடு கொண்டானை இராஜ ராஜச சம்புவ ராயர்க்கு எரிமருந்தன் அரச நாராயணன் இராஜராஜ மூவேந்தரையனும், எரிமருந்தன் மென்மாத்தனை ஜனநாத மூவேந்தரையனும் இவ் விருவோம் கல்லு வெட்டிக்குடுத்த பரிசாவது இவரும் நாங்களும் கூ ஆவது ஆனி மாதத்து நடுவிற் பத்திற் செய்த நிலைமைத் திட்டினபடியே இவற்குப் பிழையாதே நிற்கக்கடவோமாகவும் இப்படிக்குப் பிழைத்தோமாகில் .. .. எங்க ளொட்டை வன்னிமாகருச் செஞ் .... ங் கலசப்பானையும் எடுக்கக்கடவோ .... திருசக கல்வெட்டிகுடுத்தோம் இராஜராஜ மூவேந்தரையனும் ஜனனாத மூவேந்த .... (குறை)

மேல்காட்டிய கல்வெட்டுகளால் கடைசிக் குலோத்துங்க சோழன் காலத்து (அதாவது அ௫0 அல்லது கூ00 ஆண்டுகள்) இருந்த எரிமருந்தன் இராசராச மூவேந்தரையனும் எரிமருந்தன் மென்மாத்தனை ஜனனாத மூவேந்தரையனும் ஒருவரையொருவர் திட்டினபடியால் அதனை நாடவர் அறிந்து அவர்கள் மேற்படி பிழை செய்யாதிருக்கவும் அப்படி மீறிச் செய்தால் ...... என்னவோ கலசப்பானை எடுக்கவும் கல்வெட்டி வைத்ததாம். இவற்றுள் சில விளங்கவில்லை. ஆயினும் எரிமருந்து என்கின்றது வெடிமருந்தே. அம் மருந்து கெட்டித்த "எறிபுழைகள்" அக்காலத்து இருந்தனவென்றும், அவ் வெறிபுழைகளினின்றும் சிறு குண்டுகள் எறியப்பட்டனவென்றும் விளங்குகின்றன. பனைமலைக்கு அடுத்த அனந்தபுரத்தினுக்குக் கிழக்கேயுள்ள ஒரு பாறையில் எரிமருந்தை யுபயோகித்த அரசர்கள் பல பெயரைக் குறிப்பிட்ட கல் வெட்டு ஒன்று உண்டு. அது மாதிரி பல செஞ்சிப் பக்கம் பார்க்கலாம்.

திரு. சுப்பிரமணிய தேசிகர்,
சிலாசாசன பரிசோதகர், காஞ்சீபுரம்.

ஓர்வித ஜெர்மனி விளையாட்டுச் சாமான்.

சிறு பிள்ளைகளின் உள்ளம் அதிக அசைவுள்ளதும், அடிக்கடி அச்சமுறக்கூடியதும், ஊக்கமுள்ளதும், கீழ்ப்படிந்து செல்லுந் தன்மையுள்ளதும், நம்பிக்கையுடையதுமாக இருக்கின்றது. முக்கியமாய், எப்பொருளையும் நோக்கும் இயற்கையுள்ளது. அது மெழுகைப்போல எவ்வித மாறுபாடுமடையக்கூடியது. இத்தகைய மென்மையான நிலத்தில், எத்திக்கிலும் தங்கள் "கல்வியே" (Kultur) மேம்பாடடையக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கும் ஜெர்மனியர் எங்ஙனம் தங்கள் விதைகளை விதைக்காதிருப்பார்கள்! நாகரிகத்தை வேரோடறுக்கவேண்டுமென்றே தற்காலம் அவர்கள் நடத்தும் சண்டையின் நிமித்தம் தங்கள் பிள்ளைகளின் உள்ளத்தையும் ஒருவாறு கவர்ந்தும், அவர்களுக்குப் புதிய விளையாட்டுச் சாமான் செய்தும், எப்பொருளையும் அழிப்பதனாலேயே கிடைக்கும் களிப்பைக் கற்பித்தும் வருகின்றார்கள்.

சாதாரணமாகப் பிள்ளைகளின் முன்பாக யாதேனும் ஓர் படம் தோன்றியவுடனே, கண்கள் விழித்து நிலைத்து நிற்கின்றன; அறிவும் அவைகளின் வழியாக ஊடுருவிச் செல்வதுபோலக் காண்கின்றது. பலவிதமுள்ள அட்டையைச் சதுரமாயும், வட்டமாயும், முக்கோணமாயும், இன்னும் ஏனைய வடிவமாயும் துண்டித்து அத் துண்டுகளை ஒருங்கு சேர்த்து ஒரு வீடுபோலமைத்தல் அவர்களுக்கு மிகப் பிரியம். அதனிலும் சாய்வாகவிருக்கும் அக் கட்டடத்தின் மேற்பாகமாகிய கூரையை நிலை நிறுத்தல் மிகவுங் கடினம். இத்தகைய சிறுவர் சிறுமிகளுக்காகச் சில வர்ணந்தந்த படங்கள் சித்தம்செய்யப்பட்டுவருகின்றன. அவைகளிலிருக்கும் கோடுகளின் வழியாய்க் கத்தரித்து, இலக்கம்போல மடித்தால் உடனே ஒரு கிராமம் உண்டாகும். இக்காரணம்பற்றியே, அநேக தேச படங்களும் சிறுசிறு அட்டைகளின் உதவியினாற் சேர்க்கப்படுகின்றன.

இவ் வதிசய குணத்தின் முழுப் பிரயோசனத்தை அடையாதிருத்தல் நம் பகைவர்களின் கொள்கைக்கு முற்றிலும் விரோதமன்றோ? கிராமங்களிற் சிறந்தது வீடுகளெல்லாம் தரை மட்டமாக்கப்பெற்றிருப்பதுவும், பீரங்கிகளினாலும் தீயினாலும் தகர்க்கப்பட்டும் எரிக்கப்பட்டுமிருப்பதுவுமே. இவ்விதக் கிராமங்களிற் சிறந்தது பிராஞ்சுதேசத்திலுள்ளதென்றால் ஜெர்மனிய பிள்ளைகளுக்கு உற்சாகத்தைத் தூண்டத் தக்கதே. இதுபற்றியே, காலதாமதமின்றி, நம் போலி நாகரிகர்கள்

சில படங்களைச் சித்தஞ்செய்து விற்பனைக்குக் கொண்டுவந்திருக்கின்றார்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் இரவு மேசையின்மீது இப் படங்களைக் காண்பது அவர்களுக்குக் குதூகலத்தைத் தாராநிற்கும்.

ஒவ்வொரு படமும் எழு கட்டடமுள்ள ஒரு பிராஞ்சு கிராமமாக அமைக்கத்தக்கதாயிருக்கின்றன. அவைக ளொன்றின் சுவர்மேல் பிராஞ்சு பாஷையில் "காபி கிளப்" என்று பெயருமிட்டிருக்கின்றார்கள். நகராதிகாரி மாளிகையின் சுவர்கள் கறுத்தும் பீரங்கிகளினுல் துளைக்கப்பட்டுமிருக்கின்றன. தபாலாபீஸ் தீயினுல் எரிக்கப்பட்டிருக்கின்றது. கோயிலும் விடப்படவில்லையென்றால் அவர்களின் நாகரிகம் எத்தன்மையுள்ளதென் றாகிக்க!

இவைகளைக் கண்ணுற்றுச் சந்தேகிக்கும் மந்த புத்தியுள்ளவர்களுக்காக, மேற்கூறிய கட்டடங்களின் மத்தியிலுள்ள மைதானத்தில் ஒரு பெரிய பீரங்கியும் அதன் சாமான்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. அக் கிராமத்தில் நடந்தேறிய தீய செயல்களுக்கு அது ஓர் அறிகுறி போலும்!

என்ன புத்தி நுட்பம்! அந்தோ! எல்லாம் பூரணமாய் ஒருங்கு சேர்ந்திருக்கின்றது! ஆனுல், நமது மாசற்ற பிள்ளைகளையும், வீரமில்லாத பெண்களையும், கிழவர்களையும், போருக்கு அருகரல்லாத கிராமவாசிகளையும் சுவர்களினேரம் நிறுத்திச் சுட்ட அப் பிரேதங்கள் மாத்திரம் காணப்படவில்லை!

பிராஞ்சு நண்பன்.

இலக்கியப் பகுதி.

யசோதர காவியம்.

(வெண்டாமரை ௨, இதழ் ௫-௬, 129-ம் பக்கத் தொடர்ச்சி.)

யசோதரன் தன் மனைவியின் பின்னே சென்று மறைந்து நிற்க, அரசியை அட்டபங்கன் என்னும் யானைப்பாகன் கண்டவுடனே அவள் கருங்குழல் பற்றித் தரையிற் புரள இழுத்து இரு கைகளாலும் ஓங்கிப் பன்முறை யடித்து, "தாமதித்தது என்? சொல்லுக" என்று துடியிடை துவள வீழ நிலத்திடைத் துகைத்திட் டானே. இருளினுல் அடர்க்கப்

பட்ட இளம் பிறைபோல அமிர்தமதியும் பாகன் கார்லால் மிதிப்புண்டதால் விம்மி விம்மிப் பேசாது சிறிதுநேரம் நிலைகுலைந்து நிற்கவே, அதுகண்ட பாகன் அவளது மலரடிமேல் தனது சென்னியைச் சூட்டி அவளையாற்றுவித்தனன். உடனே அவளும் மெல்லத் தேறி, சாரனை மகிழ்ந்து நோக்கி, "ஐய! நீ முனியாதொழிக; அரசனோடு ஆசனத்திலிருந்து கொடிய பாவமிழைத்தேன்; தாமதம் நேர்ந்தது, அதனை யான் சொல்லாதொழிந்தேன்" என்று கூறி, "கற்பகம் நேரப்பெற்றோர் அதை விட்டு விலகிநிற்ப துலகிலில்லை; இனிக் காதற்றுணைவர் நின்னைவிட எனக்கு வேறொருவருண்டோ விளம்புக" என்று பாகனோடு பகர்ந்து மகிழ்ந்தனள்.

இதனை மறைந்து நின்று கண்ட மன்னன் எரியெழ விழித்துச் சீறி, "இப்போது இவர்களை இவ் வாளினாற் கொன்று கூற்றுக் கிரையாக்குவேன்" என்று துணிந்தனன். அவன் கையில் வாளும் அதனையுணர்ந்தது. அப்போழ்து அச் செயலை விலக்கி ஓர் தெளிந்த அறிவு அவன் உளத்தே யெழுந்தது. யசோதரன் தனக்குள் நினைக்கலானான்: மாதர்கள் யாவராயினும் கொல்வதற்குரியரல்லர்; அறிவிலானாகிய இவனும் அப் பெண்ணை யொத்தவனே; வேறு மொன்றுண்டு: ஏதிலார் மன்னர் சென்னி யிடுதலுக் குரிய வாளில், தீதுசெய் சிறுபுன் சாதி சிதைத்தலுந் திறமன் றென்றன். இனையன பலவும் எண்ணி யிழித்துப் பழித்துக் கூறி மகளி ரின்பத்தை வெறுத்துச் சென்று தன் அமளியிலேறித் தனக்குள்ளே நினைக்கின்றான்:

எண்ணம தலாமை பண்ணு மிற்பிறப் பிடிய நாறு
மண்ணிய புகழை மாய்க்கும் வரும்பழி வளர்க்கு மானத்
திண்மையை யுடைக்கு மாண்மை திருவொடு சிதைக்குஞ் சிந்தை
கண்ணொடு கலக்கு மற்றிக் கடைப்படு காம மென்றான்.

அரசர் குலத்திற் பிறந்து உருவினாலும் அழகினாலும் திருமகளை யொத்த இவளையும் கருமலி கிருமி யன்ன கடைமகற் கடிமை செய்த தீமதியையுடைய மன்மதனது செய்கையை விட்டுத் துறப்பதே சிறப்புடையதென்றான். உலகத்திற் பெண்கள் தம்மை மணந்தோர்க்கே எப்பொழுதும் உரியவரென்னும் நியமம் காணப்படவில்லை; ஆதலின் இப் பெண்ணினத்தவரை விட்டு விலகுவதே நற்செயல் என்றனன்.

இம் மறை வெளிப்படா வண்ணம் மன்னன் மற்றை நாளில் முன்போல் சுற்றத்தவர்கள் சூழ அரியணையிலிருந்தபோழ்து, பட்டத்தரசியாகிய அமிர்தமதியும் வழக்கப்படி வந்து அவன்பாலிருந்தனள். அதைக்

கண்டு அரசன் நகை விளைக்கும் சில மொழிகள் பகர்ந்து தன் கையி விருந்த கருநெய்தற் பூவை அரசியின்மேல் வீசுதலும், புகைகமழ் குழலி சோர்ந்து பொய்யினால் மெய்யை வீழ்த்தாள். அங்ஙனம் நினைவு மயங்கினவள்போல் கீழே விழுந்த அரசி, உடனே பனிநீர் தெளித்தல், குளிர்ந்த காற்றுண்டாக விசிறுதல் முதலியவற்றால் தேற்றப்பட்டு நினைவு வந்தவள்போ லெழுந்தனள்.

புரைபுரை தோறு நீர்சேர் பொள்ளலிவ் வுருவிற் றாய
விருநிற மலரி னாலின் றிவளுயி ரேக லுற்ற
தரிதினில் வந்த தின்றென் றவளுட னசதி யாடி
விரகினில் விடுத்து மன்னன் வெய்துயிர்த் தனனி ருந்தான்.

பின்னர் யசோதரன் உள் வெறுப்புடையவனாய் அரசை விட்டுத் துறக்க நினைத்து, தன் தாயாகிய சந்திரமதியின் அரண்மனையை யடைந்து அவளைக் கண்டு வணங்கி, "கடல்சூழ்ந்த இவ் வுலகையெல் லாம் இனி நீயே அரசுபுரிவாயாக" என்றனன். அது கேட்ட அன்னை, "மைந்த! உன் அழகிய உருவம் வாடி மலர்முகமும் மாறுபட்டு அழகழிந் துளது, இஃதென்கொலோ! ஏதோ பிணியுளதென்று என் உள்ளம் என்னை வருத்துகின்றது, யானறிய உரைத்திடுவாய்" என்றனள். அதற்கு யசோதரன், "அன்னையே! விண்ணிடை விளங்கும் சந்திரனது மனைவியாகிய உரோகிணி தேவி சந்திரனை விட்டு நீங்கி மண்ணிடை மழுங்கவும், இருள் நிறைந்த முகிற் படலம் சூரியனை மறைக்கவும் இர வினிற் கனவு கண்டேன்; அது என் நெஞ்சை வருத்துகின்றது; அதனால் என் னுடம்பு இளைத்துவிட்டது" என்றான். இங்ஙனம் மறைபொரு ளாகக் கூறியதன் உண்மையை யுணராமல் தாய் சாற்றுகின்றாள்: மைந்தனே! இந்நகர்த் தெய்வமாகிய சண்டமாரிதான் இவ்வாறு உன திடம் தீய கனவு காட்டுவித்துள்ளாள்; அதனால் தீமை நேருமென்று அச்சமுறாதே; நினக் கிறைவியாகிய அத் தேவியை வணங்கி வழிபாடு செய்வையேல் நினது தீமைகளெல்லாம் நீங்கிப் பல நன்மைக ளுண் டாகும்; ஐப்பசி மாதம் சுக்கில பக்கம் அட்டமி திதி சேரும் செவ்வாய்க் கிழமையில் நீ அக் காளிக்குப் பலிகொடுத்து வழிபட்டால் அப்பலியை யேற்றுக்கொண்டு தேவி களிப்புறுவாள்;

மண்டமர் தொலைத்த வேலோய் மனத்திது மதித்து நீயே
கொண்டுநின் கொற்ற வாளிற் குறுமறி யொன்று கொன்றே
சண்டிகை மனந்த ளிர்ப்பத் தருபலி கொடுப்பத் தையல்
கண்டபின் கனவிற் றிட்பந் தடுத்தனள் காக்கு மென்றாள்.

இங்ஙனம் அருளின்றித் தாய் மொழிந்த சொற்களைக் கேட்டு யசோதரன், தன்னிரு கைகளாலும் செவிகளைப் பொத்திக்கொண்டு, அச் சொற்களுக்குப் பொறாது நெஞ்சம் உருகப்பெற்று நிகழ்த்துகின்றான்: "தாயே! இங்ஙனம் அருளிச்செய்தது என்கொலோ! இது புதிதாயிருக்கின்றது;

என்னுயிர் நீத்த வேனு மியானுயிர்க் குறுதி சூழா
தென்னுயிர்க் கரண நாடி யானுயிர்க் கிறுதி செய்யின்
என்னையிவ் வுலகு காவ லெனக்கினி யிறைவி கூறாய்
மன்னுயிர்க் கரண மண்மேன் மன்னவ ரல்ல வோதான்;

யான் உயிர் வாழ்தல்வேண்டிப் பிற வுயிர்களைக் கொன்றால் உயர்ந்த விண்ணின்பம் மேலால் வரும் வழிதிரியும்; அன்றியும் தனது ஊனுயிர் இன்பத்தை மட்டும் நாடி மற்றொன்றையும் நாடாத மனிதரின் வாழ்வு இம் மண்ணிலேயே நிற்கும் இயல்புடையது; அல்லாமலும் அன்னையே! நினது குலத்து முன்னோர்கள் உயிர்களைக் கொல்லும் கொடுந் தொழிலுடையரு மல்லர்; இன்று புரியும் கொலைப்பாவத்தால் மேலால் இடர் பலவிளையும்; நீ சொல்லியதெல்லாம் நன்மை விளைப்பன வல்ல" என்று கூறினன். அது கேட்டுத் தாய் சினங்கொண்டு, "எனது சொல்லை மறுத்தனை, நீ கொடியவன்" என்று பின்னுங் கூறுவாள்: "நீ உயிர்க் கொலைக்கு அஞ்சுவாயேல் மாவினால் ஒரு கோழி செய்து கொன்று பலிகொடுத்துத் தேவியை மகிழ்வி" என்றாள்.

பின்னர் யசோதரன், நம் மனத்து வகுத்துக் கூறிய கனவின் பொருளோ வேறு, அதற்குத் தாய் கூறிய உறுதிமொழியோ வேறொன்றாயிற்று; வினைப்பயன் என்னிடத்துப் பல இடர்களாக விளைந்தது; வினைகளின் விளைவை யாவர் விலக்குநரென்று நின்றான். நின்றவன், உயிர்ப்பொருள் வடிவத்தைக் கொல்லுதலும் உயிர்க் கொலையேபோலும் என்னும் உள்ளமுடையவனாயினும், சின தருமத்தின் உண்மையை யறிந்து திடமாய் நிற்கும் உறுதியில்லானாதலின், தாய் சினந்து கூறிய செய்கைக்கு உடன்பட்டான். உடனே சம்பா அரிசியை யிடித்தெடுத்த மாவினால் கோழி வடிவமொன்று செய்யப்பட்டது. அரசன் அதைக் கைக்கொண்டு தன் தாயோடு சண்டமாரி கோயிலுக்குச்சென்று தேவியை வணங்கி வழிபட்டு, பலிபீடத்தருகில் நின்று தன் கைவாளினால் அக் கோழியின் கழுத்தை வெட்டினன். வெட்டுதலும், தலை யறுபட்ட அக் கோழி கூவிக்கொண்டே யோடி அரசன் முன்னர் நடுங்கி வீழ்ந்தது. அது கண்ட அரசன் தன் வாளை ஒருபுற மெறிந்துவிட்டு உள்ள முருகினான்.

என்னைகொல் மாவின் செய்கை யிவ்வுயிர் பெற்ற பெற்றி
சென்னிவா ளறிய வோடிச் சிலம்பிய குரலி தென்கொல்
பின்னிய பிறவி மாலைப் பெருநவை தருதற் கொத்த
தொன்னியல் பாவ மென்னைக் கூவுகின் றதுபோ லென்றான்.

"அறிவற்ற தாய் சொற்கேட்டு அறிவிலேன் செய்த அருளில் செய்கை ஆ! சிறிதும் தகாது; இறந்த கோழியின் வாய்க்குரல் என் னெஞ்சை யரிகின்றது; அமிர்தமதியின் களவொழுக்கமும் என்னைக் கொல்கின்றது; இப்படித் தீவினைகள் என்னைக் கொன்றொழிக்குங் கொலோ!" என்று நினைந்தழுங்கினன்.

இவ்வகை யெண்ணங்களுடன் யசோதரன் நகரிற்புகுந்து, தன் மகனிடத்து அரசை யொப்புவித்துத் தவம்புரிய வனம்புகுதற்கு ஆயத்த மானான். அதனையறிந்த அமிர்மதி, அரசன் தன்னை யவமதித்து விடுத்தா னென்று கருதி அத் தீயவள் ஓர் வஞ்சகம் நெஞ்சிற்கொண்டனள். கொண்டவள் அரசனை நோக்கி, "இறைவ! நீ அரசை விட்டு நீங்குவை யானால் எனக்கும் அஃதேயாகுக; இன்று என் மனையில் நீயும் நின் தாயும் மைந்தனும் அமுதுகொண்டருளினால், அரசுதா னவனதாக விடுதுநா மடிகள்" என்றாள். இவளது மன நிலையை அரசன் அறிந்தவ னாயினும் அவளை நோக்கி, "நீ விரும்பியபடியே ஆகுக" என்று கூறித் தன் தாயோடு இருந்தனன். தீங்கது தறுகிற் றீய நயமறன் னயம தாமே.

நஞ்சுகலந்த தேனைச் சேர்த்து இலட்டுவங்கள் (அப்பவருக்கம்) செய்து தன் கணவனுக்கும் மாமிக்கும் பலரும் காண உணவளித்தனள். சந்திரமதியும், யசோதரனும் உணவிற் கலந்துள்ள நஞ்சு தலைக்கேறலும் மயங்கி வீழ்ந்தனர்; தீயவினைகள் புகுதலால் பொறிகள் பொன்ற மாண் டொழிந்து விலங்கினத்திற் பிறந்தனர்.

பார்த்தற்கும் மனம்பொறாத குட்டநோயுடைய அட்டபங்கனை மனத்துட்கொண்டு, நாட்டிற் கரசனாகிய கணவனுக்கு மரண முண்டு பண்ணின அமிர்தமதி கொடியவள் கொடிய பாவி என்றார் சிலர். யசோ தரன் அறப்பொருளை யறிந்திலன்; அருந்தவரிடம் சென்று பணிந்து மிலன்; தீநெறியில் மயங்கி உலகில் அரசாட்சி யொன்றினிடமே மகிழ்ச்சிகொண்டான்; அளவின்றி இளமாதர் இன்ப நுகர்ச்சியி லாழ்ந் திருந்தான்; முடிவிலோ சிறப்புடை மரண மில்லை சேல்கதி யென்கோ லென்றார் வேறு சிலர். நகரத்தவரும் மற்றவரும் இப்படிப் பலவிதமாக நினைந்துருகிப் புலம்பி வாடினர். அரசன் மனைவியாகிய அமிர்தமதியோ

தான் கருதியதை முடித்துவிட்டாள். பின்னர் உண்மையில் மனதில் வாட்டமுள்ளவள்போல் யசோமதி என்னும் தன் மகனை யழைத்து, "மைந்தனே! நீ தனியனாகும்படி இறைவனை விட்டுப் பிரிய நேர்ந்தது எனது தீவினையினால் விளைந்ததாகும்; அதுபற்றி உன் மனத்திலுள்ள நோயை விட்டொழிப்பாயாக; முடி கவித்துக்கொண்டு உலகிற்கு ஒரு தலைவனாகி அரசுபுரிவாயாக" என்று கழறிக் களிப்புற்றிருந்தாள்.

வாரணி முரச மார்ப்ப மணிபுனை மகுடஞ் சூட்டி
யோரணி யார மார்ப னிசோமதி யிறைமை யெய்திச்
சீரணி யடிகள் செல்வத் திருவற மருளல் செல்லா
னோரணி யார மார்ப னுவகையங் கடலு ளாழ்ந்தான்.

தனதெண்ணம் நிறைவேறியதால் அமிர்தமதியும் அளவில் களிப்புற்று அட்டபங்கனோடு கூடி யின்புற்றிருந்தாள்.

"ஓ மாரிதத்த மன்னனே! வினையினால் விளையும் செயல்கள் இத்தன்மையன; துணைவராகிய மகளிரால் விளையும் இன்பங்களும் இத்தன்மையனவே; தெளிவில்லாத அரசர்கள் அரசு செய்கையும் இத்தன்மையதே; நீ இவற்றை மனத்துள் மதித்தறியக்கடவாய்" என்று அபயருசி அறைந்தான்.

இரண்டாவது சருக்கம் முற்றிற்று.

பத்திராதிபன்.

சாத்திரப் பகுதி.

முக்திகோபநிஷத்.

(வெண்டாமரை ௪, இதழ் ௫-௬, 131-ம் பக்கத் தொடர்ச்சி.)

௩௨. மனமென்னும் விருக்ஷத்திற்கு, பிராணஸ்பந்தமும் வாசனையும் இரண்டு காரணங்கள்; அவ் விரண்டில் ஒன்று நசிக்க இரண்டும் விரைவாக நசிக்கின்றன.

மனமென்னும் மரத்தின் வளர்ச்சிக்கு, பிராணசாஞ்சல்யமும், மலின வாசனைகளும் இரண்டு காரணங்கள்; அவை பலமாயிருக்கும் போது ஞானஞேயமாகாது; அவ் விரண்டில் ஒன்று நசித்ததாலும் இரண்டாவதும் கூட நசிக்கும். திட அபரோக்ஷ ஞானம் வர வாசனாக்ஷய

மாகும்; அது ஆக்வே பிராணசாஞ்சல்யம் நீங்கும். ஞானத்தினால் வாசனாக்ஷயமும், தியான யோகத்தினால் பிராணசாஞ்சல்யமும் நசிக்கும்; இவ் விரண்டும் நசிக்கவே ஆதாரமின்றி மனமென்னும் மரம் சமூலமாக நசிக்குமென்றறிக.

௰௩. (மேலர்த்தத்தையே விவரிக்கின்றார்.) பற்றில்லாத வியவகாரத்தையுடையவனாதலினாலும், இச் சம்சார பாவனையில் அபிமானத்தை விடுதலினாலும், சரீரத்திற்கு நாசத்தைப் பார்த்தவனாதலினாலும் வாசனை பிரவர்த்திக்காது.

நான் பிரம்மமானேன் என்னும் அனுபவம் உண்டாதலினாலும், திடவைராக்கியத்தால் சம்சாரம் அபரமார்த்தமென்று தெரிதலினாலும், சரீரங்கட்கு அழிவு உண்டாதல் பிரத்தியக்ஷமாக அகப்படுதலினாலும் மலின சம்ஸ்காரம் நசித்துப்போகும் என்றறிக.

௰௪. நன்றாக வாசனைகளை விடுதலினாலே மனசு மனோநாசித்தியத்தை அடைகின்றது; எப்போதும் வாசனைகளில்லாதவனானபடியினாலே எப்போது அந்த ஞானி மனதை மனனம் செய்கின்றானோ அப்போது மனதற்ற அவஸ்தை உதியாநின்றது; அந்த அவஸ்தை மிகவும் சிரேஷ்டமான உபசாந்தியைக் கொடுப்பதாகின்றது.

அமனஸ்காவஸ்தை (மனமற்ற நிலை)யைப் பொருந்தித் திடசாந்தியை யடைகின்றான் என்றறிக.

சிரவணாதிகளினாலும் சமாதிகளினாலும் அமானித்துவாதி குணங்களினாலும் சித்தம் தன் விகாரங்களோடு நசித்துச் சுத்த சத்துவத்தை யடையும். வாசனைகள் இல்லாமற்போதலினாலே நிரந்தரம் பிரம்ம சொரூப சாக்ஷாத்காரம் ஆக அத்தியந்தம் சாந்திரூபமான அமனஸ்க யோகம் நிர்விக்கினமாக உதிக்கும். அமனஸ்க யோகமாவது சுத்த பிரம்ம சொரூபாவஸ்திதியை யடைந்திருத்தல்.

௰௫. (எம்போலியர்க்கு அது எவ்விதம் கிடைக்குமென்ன, ஸ்ரீராமர் கூறுகின்றார்.) நீ எதுவரையில் பிரம்மாகாராகாரிதமாகாத மனதுடையவனும், அறியப்படாத பிரம்ம பதமுடையவனும் ஆகின்றனையோ அதுவரையும் குருபோதத்தினாலும் சாஸ்திரப் பிரமாணங்களினாலும் நிர்ணயிக்கப்பட்ட சித்தாந்த ரகஸ்யத்தையும் அதன் அனுஷ்டானத்தையும் ஆசரிப்பாயாக.

உனக்குப் பிரம்ம ஞானத்தில் திடமான அனுபவம் சம்பவிக்காத போது குருபோதிதமாய்ச் சாஸ்திரப்பிரமாண சித்தமான சிரவண மனன

கிதித்தியாசங்களைப் பிரம்மபோத சாக்ஷாத்கார பரியந்தம் அப்பியசிப்பாயாக என்றாரென்க.

௧௬. (பிறகு என்னசெய்தல் வேண்டும் என்று கேட்க, சொல்லுகின்றார்.) அந்தத் திட அப்பியாசத்தினாலே பரிபக்குவமான மனச்சுத்தியுண்டானவனும், நிச்சயமாகத் தெரியப்பட்ட பிரம்ம பதார்த்தத்தையுடையவனும், மனச்சந்தாபமற்றவனுமாகிய உன்னால் சிரேயஸ்ஸாதனமாயினும் சமாதி சுப சம்ஸ்கார சமூகமானது விட்டுவைக்கப்படத்தகுந்தது.

மலின வாசனைகள் சிறிதுமில்லாமல் போகப்பெற்றவனும் திடமாகப் பிரம்ம சாக்ஷாத்காரம் உண்டாகப்பெற்றவனும் பிரம்ம வித்தையில் சந்தேகமில்லாமல் சம்சாந்த மனதுடையவனுமாகிய நீ, சுபவாசனாப்பியாசம் கூட, ஸ்வரூப பிரம்மாநந்தானுபவத்திற்குத் தடையேயாதலின் அதையும் விடுத்துப் பிரம்மரூபத்தை யடைந்திருப்பாயாக என்றாரென்க.

இதுவே விதேக கைவல்யம், இதுவே ஜீவன் முக்தி.

(அதைக் கேட்டு அநுமான் சித்தநாசனத்தையும் அதன் பலத்தையுங்கூட விவரிக்கவேண்டுமென்று கேட்க, ஸ்ரீராமர் அருளிச்செய்கின்றார்.)

௧௭. மனோநாசனம் உருவத்தோடு நசித்தலும் உருவமில்லாமல் நசித்தலுமென இரண்டுவிதங்களுண்டு; ஜீவன் முக்தியில் உருவத்தோடு கூடின சித்தநாசனம் ஆகின்றது; விதேக முக்தி யடைந்தால் சித்தநாசனம் உருவமில்லாததாகும்.

மனோநாசனம் ஸரூபலயமென்றும் அரூபலயமென்றும் இரண்டு விதம். ஜீவன் முக்தியினிடத்துச் சித்தம் ஸரூபத்தோடு லயிக்கும். பிராரப்த கர்மம் இருக்கும்வரையில் விருத்தியிருக்குமாதலின் அது க்ஷயமாகும் வரையில் ஸரூபலயாவஸ்தையை அடைந்திருக்கும். விதேக முக்தியினிடத்து, பிராரப்தம் க்ஷீணித்து விருத்தி லயிக்குமாதலின் ரூபமேதுவுமில்லாமல் கர்ப்பூர தீபத்தைப்போல் ஸ்வயோனியினிடத்தே லயிக்கும். ஜீவன்முக்தி விதேகமுக்திகளிடத்துள்ள சித்தநாசனப் பிரகாரம் இதுவேயென்பது பரம சித்தாந்தமென்றாரென்க

௧௮. (இன்னமும் சித்தநாசனப் பிரகாரத்தை விவரிக்கின்றார்.) இந்தச் சித்தத்தினுடைய நாசனப் பிரகாரத்தை இப்போது சொல்லுகின்றேன்; ஓ வாயு குமாரா! நீ ஆதரபூர்வகமாகக் கேட்பாயாக. எந்தக் காரணத்தினால் திரும்பவும் மனோநாசனமென்னும் பெயருள்ள நிர்விகல்ப சமாதி எப்போது உனக்கு இருக்குமோ அப்போது மைத்திரி, கருணை,

முதிதை, உபேக்ஷகளெனும் சற்குணங்களோடு கூடிக்கொண்டவனாய்ச் சாந்தியை (நிர்மனஸ்கதையை) அடைகின்றாய், சந்தேகமில்லை.

நீ நிர்விகல்ப சமாதியையும் அமனஸ்கயோகத்தையும் அடைந்து மைத்திரியாதி குணங்களுடையவனாய்ப் பிரம்மாநந்த சுகரூபனாகுக என்றாரென்க.

மைத்திரியாவது சுகமுடையவர்களிடத்துச் சிநேக பாவம். கருணையாவது துக்கமுடையவரிடத்தில் தயை. முதிதையாவது சற்சன சங்கத்தில் ஆநந்தம். உபேக்ஷையாவது இவர்களின் வேறானவர்களிடத்தில் (துஷ்டர்களிடத்தில்) உதாசீனம். இவை ஞானிகளிடத்துள்ள சிரேஷ்டமான குணங்கள்.

(வரும்.)

ஓர் ஆரியன்.

கலைமகள் கழகத்திற்கு நன்கொடை.

அம்மளூர்ச் செந்தமிழ் வித்தியாசாலைக் கதிபர் ஸ்ரீமான் ந. ப. அ. க. சதாசிவம்பிள்ளை அவர்கள், 1. திருவாரூர்த் தியாகராசலீலை, 2. தனிப்பாடற்றிரட்டு, 3. உறையூர்ப் புராணம், 4. பிரபுலிங்கலீலை, 5. மெய்யறிவு, 6. நீதிநெறிவிளக்கம், 7. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், 8. திருவருணைக்கலம்பகம், 9. ஏரெழுபது, 10. நற்றிணை, 11. ஆசாரக்கோவை மூலமும் நச்சினார்க்கினியருரையும், 12. சுந்தர காண்டம் மூலமும் உரையும், 13. வேதாரணிய புராணம் ஆகப் பதின் மூன்று புத்தகங்களும், புதுவைக்கடுத்த முருங்கப்பாக்கம் "வித்தியானந்த விநோதசபை" தனாக்ஷகர் ஸ்ரீமான் அ. நமசிவாயநாட்டார் அவர்கள், பகவத்கீதை (கூடார்த்ததீபிகை என்னும் உரையுடன்) ஒன்றும், நமது கலைமகள் கழகத்துப் புத்தக நிலையத்திற்கு நன்கொடையளித்தார்கள்.

அன்புகூர்ந்து அரிய பெரிய புத்தகங்களை உதவிய இப் பரோபகார சீலர்களுக்கு, புதுவைக் கலைமகள் கழகத்தார் பெரிதும் நன்றி செலுத்துகின்றார்கள்.

தி. திருப்புளிசாமி ஐயர்,
கழகத்தின் காரியதரிசி.

பத்திரிகை வரவு.

ஜனோபகாரி :— வேலூரிலிருந்து பிரசுரமாகும் இம் மாதாந்தப் பத்திரிகை, கல்வி, கைத்தொழில், விவசாயம், வர்த்தகம் முதலிய பல்வேறு அமிசங்களைக்கொண்டதாய், தன் பெயருக் கேற்ப, பொது சனங்களுக்கு உபகாரியாகவே விளங்குகின்றதென்பதில் ஐயமில்லை. இதற்குச் சந்தா வருடம் ஒன்றுக்கு ரூபாய் 3.

ஞானபாநு:— இம் மாதாந்தப் பத்திரிகை, சென்னைக் கோமளேசுவான்பேட்டையிலிருந்து வெளிவருவது. வைதிக இலௌகிக ஞானத்திற்குரிய பல அரிய விடயங்கள் செறிந்துள்ளதாயிருக்கின்றது. பத்திராதிபர் ஜீ. சுப்பிரமணியசிவம் அவர்கள். வருடச் சந்தா ரூ. 1-12-0.

கலாசிந்தாமணி :— சென்னையிலிருந்து மாதந்தோறும் பிரசுரமாகிறது. ஆன்ம ஞானத்தைச் சார்ந்தும், சரித்திரம், வைத்தியம், சோதிடம் முதலியவற்றைச் சார்ந்தும் பல வியாசங்கள் இப் பத்திரிகையிற் காணப்படுகின்றன. வருடச் சந்தா ரூ. 1 – 0 – 0.

தமிழ்ப் பெருமாட்டி:— இதுவும் சென்னையிலிருந்து வரும் ஒரு மாதப் பத்திரிகை. தமிழ்ப்பெருமாட்டி கழகத்தாரால் பிரசுரிக்கப்பெற்று, மதவிடயங்களையும் வைத்தியம் விவசாய முதலிய உலக விடயங்களையும் சார்ந்த வியாசங்களைப் புனைந்துள்ளதாயிருக்கின்றது. பத்திராதிபர் ஸ்ரீவாசுதேவராவ் கேய்க்வாட் அவர்கள். வருடச் சந்தா ரூபாய் 3.

விவேகோதயம் :— இஃது மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்றும் வெளிவரும் ஒரு மாதாந்தப் பத்திரிகை. தக்கவர்களால் விடயதானஞ் செய்யப்பெற்று, தமிழ் வளர்ச்சியையும் மற்றும் பல நலங்களையும் நாடியதாயிருக்கின்றது. ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையர் அவர்கள், ஸ்ரீமதி வி. பாலம்மாள் அவர்கள் ஆகிய இருவர் இதற்குப் பத்திராதிபராவர். வருடச் சந்தா ரூ. 1 – 8 – 0.

அன்புகூர்ந்து இவற்றை நமக் கனுப்பிவரும் பத்திராசிரியர்களுக்கு நமது நன்றியை யனுப்புகின்றோம்.

ப–ர்.